Tamilmanam International Research Journal of Tamil Studies
Volume 12, Issue 02 (July-2026)
www.tamilmanam.in
ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12022026

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref | Google Scholar
SJIFImpact Factor3.5| Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm12022026.32

The descriptions conveyed by the prime epic of Tamil

Dr. R. Sornabamila*,
Assistant Professor, Department of Tamil, S.T. Hindu College, Nagercoil-02,
Manonmaniam Sundaranar University, Tirunelveli.
ORCiD: http://orcid.org/0000-0002-3677-4644,
*Corresponding Email: sornabamila1986@gmail.com, Tel: 9486630738

Article Info
Received on 27-June-2026, Revised on 29-June-2026, Accepted on 29-June-2026, Published on 14-July-2026

ABSTRACT

Kumanan was a patron who continued to generously provide for those who sought his aid, even after the era of the 'Seven Great Philanthropists' (Pegan, Pari, Ori, Kari, Athigan, Aay, and Nalli) had passed. Because he had lavishly bestowed vast wealth upon poets to foster he growth of the Tamil language, he incurred the wrath of his younger brother (Ilangumanan), lost his kingdom, and was forced to live in the forest. "Tamilukku Thalai" is a short epic that illustrates the extraordinary generosity of the Tamil patron - king Kumanan; he instructed his younger brother- who had set a price on his head-to take his head and use it to alleviate the poverty of the great poet. Perunchithiranar, who had come seeking his aid.

Keywords: *Pattinathadigal, Spirituality, Mind, Path of Devotion (Bhakti Marga), Wisdom (Jnana), Spiritual Path, Divine Experience, Impermanence of the Body, Siddha Philosophy.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Tamilmanam International Research Journal of Tamil Studies
Volume 12, Issue 02 (July-2026)
www.tamilmanam.in
ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12022026

தமிழுக்குத்தலை காவியம் உணர்த்தும் வருணனை

***முனைவர் இரா. சொர்ணபமிலா**, உதவிப்பேராசிரியர்,

தமிழ்க்கலை ஆய்வகம், தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில் - 02.

ஆய்வுச் சுருக்கம்

கடையேழுவள்ளல்களான பேகன், பாரி, ஓரி, காரி, அதிகன், ஆய், நள்ளி ஆகிய எழுவர் மாய்ந்த பின்பும் தன்னை நாடிவருவோருக்கு வேண்டியன நல்குபவன் குமணவள்ளல். புறநானூற்றில் கூறப்பட்டுள்ள குமணவள்ளலின் கொடை தியாகம் மற்றும் தமிழ் உணர்வை அடிப்படையாகக் கொண்டு எளிமை , இனிமை, புதுமை நிறைந்த குறுங்காவியமாக தமிழுக்குத் தலை அமைந்துள்ளது. தமிழ் வாழ வளர திரண்டு செல்வத்தை புலவர் பெருமக்களுக்கு கொடையாக வாரி வழங்கியதால் தனது இளவலின் (இளங்குமணன்) வெறுப்பிற்கு ஆளாகி ஆட்சி இழந்து காட்டில் வாழ்ந்த காலத்தில். தன்னைத் தேடி பொருள் பெற்று வறுமையை போக்கிக் கொள்ள வந்த பெரும் புலவர் பெருஞ்சித்திரனார் இடத்து தனது தலைக்கு விலை நிர்ணயித்த தன் தம்பியிடம் தன் தலையை கொடுத்து வறுமையை போக்கிக்கொள்ள வழிகள் சொன்ன தமிழ் கொடை வள்ளல் குமணனின் கொடை சிறப்பை விளக்கும் குறுங்காவியம் தான் தமிழுக்குத் தலை.

முன்னுரை

தமிழ் இலக்கிய கால வரலாற்றில் சங்ககாலம் மனித உயிர்களின் உயிரோட்டமானக் காலம் எனலாம். ஒரு படைப்பாளன் தன் சிந்தனையில் தோன்றும் காட்சிகளை படிப்பவர்களின் மனக்கண் முன்னே கொண்டு வரும் உத்தி தான் வருணனை முறை. கற்பனையும் வருணனையும் இல்லாத எந்த ஒரு படைப்பும் சிறந்த இலக்கியம் ஆகாது. வருணனையை இயற்கை, இடம், காலம், நிகழ்ச்சி, கலை முதலிய பெயர்களிலும் வகைப்படுத்துவர். வருணனையை பயன்படுத்தி கருத்தினை எடுத்துரைக்கின்ற போது மரபு மாறாமல் எடுத்துரைக்க வேண்டும். மரபானது இலக்கியத்திற்கும் மனித வாழ்க்கைக்கும் முக்கியமானதாகும். மரபு இல்லையேல் மனிதன் இல்லை. மனிதன் இல்லையேல் இலக்கியம் இல்லை. தமிழுக்குத் தலை என்னும் குறுங்காவியத்தில் இடம் பெறும் வருணனைகளைப் பற்றி இவ்வாய்வுக் கட்டுரையில் காண்போம்.

புலவர் நாஞ்சில் நாரண.தொல்காப்பியன்

தமிழுக்குத் தலை என்ற குறுங்காவியத்தை எழுதியவர் புலவர் நாஞ்சில் நாரண தொல்காப்பியன். இவரது இயற்பெயர் அரிராமகிருஷ்ணன். இவர் 1943 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டம் நரிக்குளம் மகதானபுரத்தில் பிறந்தவர். முதுகலைபட்டதாரி ஆசிரியராகப் பணியாற்றி பணிநிறைவு பெற்றவர். காவியங்களை மரபுக் கவிதைகளில் புனைந்து தமிழன்னைக்கு அணி செய்துள்ள காவியமன்னன். முப்பால் முதல்வன், முத்தமிழ் நித்திலம், அழியா அதிகன், தமிழுக்குத் தலை, முரசுகட்டில் மோசிகீரன், நாளையபுரட்சி,

,| Copyright © Author(s)

Tamilmanam International Research Journal of Tamil Studies
Volume 12, Issue 02 (July-2026)
www.tamilmanam.in
ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12022026

அம்பேத்கார் பிள்ளைத்தமிழ், நாஞ்சில் வள்ளுவன் காவியம், குறிஞ்சிக் கபிலன், ஞான ஒளி போன்ற காவியங்களைப் படைத்த பெருமைக்குரியவர். பெருஞ்சித்திரனார் புறநானூற்றில் 158,159,160,161,163 ஆகிய ஐந்து பாடல்களில் குமணவள்ளலின் சிறப்பை எடுத்துரைப்பார். அந்த ஐந்து பாடல்களை அடிப்படையாகக் கொண்டு புலவர் நாஞ்சில் நாராயணதொல்காப்பியன் அறுசீர் விருத்தத்தில் தொடங்கி எண் சீர் விருத்தத்தில் இடையில் கும்மியை இணைத்து வெண்பாவில் 330 கவிதையில் தமிழுக்கு தலை எனும் குறுங்காவியத்தை சுவைபட மொழிந்து உள்ளார். புறநானூற்றில் கூறப்பட்டுள்ள குமணவள்ளலின் கொடை தியாகம் மற்றும் தமிழ் உணர்வை அடிப்படையாகக் கொண்டு எளிமை இனிமை புதுமை நிறைந்த குறுங்காவியமாக இந்நூல் அமைந்துள்ளது.

முதிரமலை

குறுநில மன்னர்களில் ஒருவராகவும் கடையெழுவள்ளல்களில் காலத்திற்கு பிற்பட்டவர் குமணவள்ளல்.சிறந்தகொடைவள்ளலாகவும் தமிழின்வளர்ச்சிக்கு பெருந்துணை செய்தவராகவும் விளங்கினார் **"இவன் கடையேழுவள்ளல்களின் பிற்காலத்தில் இருந்தவன் அவன் மிக்ககொடையாளி"**என்பதனை ஆ.சிங்காரமுதலியார் உணர்த்துகின்றார். தமிழையும் தமிழ் புலவர்களையும் தனது இருகண்களாகப் பாவித்து தொண்டாற்றிய குமணவள்ளல் .முதிரம் என்ற ஊரை தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்து வந்தான். இந்நகரத்தின் நடுவே அமைந்திருந்த குமணனது அரண்மனை முதிரத்தின் கலை உருவாக திகழ்ந்தது. குமணனின் முதிரமலைக் காட்சிகளை வருணிக்கும் கவிஞரின் கவிநயத்தால் காணாத காட்சியைக் கண்ட ஒருமனநிறைவை பெறமுடிகிறது. பரிசில் பெறவரும் புலவர் கூட்டத்தை கற்பனையால் புலவர் படம்பிடித்து காட்டுவது நம்மைச் சங்ககாலத்துக்கே அழைத்து செல்வது போல் உள்ளது.

முதிரத்தின் நடுவினிலே குமணன் கோவில்
முத்தமிழின் ஒருருவாய் அமைந்திருக்க
மதித்து தினம் மாபுலவர் கூட்டம் எல்லாம்
மலர் தேடும் வண்டே போல் குழுமி நின்று
புதிய கவி புதியபொருள் எனப் பகர்ந்து
புறம் அகத்தைக்காவியமாய்ப்படைத்துநின்றார்.
முதுரத்தின் முறுவலினைநிலைக்கச் செய்து
முறையாகப் பல் பரிசில் பெற்றுச் சென்றார்
தமிழுக்குத்தலை,பா.8(1-8)

என்று முறைப்படி பரிசில் பெற்ற புலவர்களது நிலையை கூறியகவிஞர் முதிரமலைக்கு தலைவனான குமணனைக் குறிப்பிடும்போது

மக்களதுமனதுறையும் தலைவன் ஆகி
மறைவடிக்கும்புலவருக்கும்புலவன்ஆகி
திக்கெட்டுமுள்ளோரும் புகழ்ந்து போற்றும்

திறன் பெற்றுபெருங்குமணன்.....
தமிழுக்குத்தலை,பா.11(1-4)

என்கிறார். முதிரமலையின் காட்சியை புறநானூறும்

கழைவளர் சிலம்பின் வழையொடுநீடி
ஆசினிக் கவினிய பலவின் ஆர்வுற்று
முட்புறமுதுகனிபெற்றகடுவன்
துய்த்தலைமந்தியைக் கையிடூஉப்பயிரும்.
அதிரா யாணர் முதிரத்துக்கிழவ புறம்158(21-25)

வருணிக்கிறது.

வஞ்சம் மஞ்சம் காணுதல்

மேன் மக்களின் அறிவானது தகுதியற்றவர்களின் பேச்சினால் சிலவேளைகளில் மாற்றம் அடைவது போல மனக் கோணலால் இளங்குமணன் அறிவிலும் மாற்றம் ஏற்பட்டது. தமிழுக்கு வாழ்வினை அர்ப்பணித்த குமணனின் உடன் பிறந்தவன் இளங்குமணன் தன் அண்ணனை அழிக்க பொருகளிறன் பேச்சைக் கேட்டு கண் விற்று கல்வி கேட்கும் மூடன் போன்று பாசத்தை இழந்து மண்ணாசைக் காரணமாக மதி மயங்கிநின்றான். இதனை கவிஞர்,

தாழைமலர் நடுவிருக்கும் நாகம் போல
தாய் தந்தை எனக்காத்த அண்ணனுக்கு
கோடரி காம்பாக குதர்க்கம் செய்தான்
கூடாத தீயருடன் கூட லானான்
தமிழுக்குத்தலை,பா.13(1-4)

என்று வருணிக்கிறார்.உலகத்தில் உள்ள கலைகளுக்கெல்லாம் தெய்வமான பழந்தமிழாள் அருகில் இருந்து காத்து நிற்கவும். மழையும் அவன் தூங்கும் நேரம் பார்த்து மனம் பொறுக்காத நிலையில் அழுதுகொண்டிருக்க ஊர் தூங்கும் நேரத்தில் இளங்குமணன் குமணனை சூழ்ந்து கொண்டான். தினை அளவும் தகுதியற்றவன் முடிதரிக்க தமிழணங்கு திணறிட்டாள் என்று தமிழணங்கு கோபப்பட்ட நிலையை எடுத்துரைக்கிறார் ஆசிரியர்.

அடி வருடி கும்பலுடன் அரசன் ஆனான்
தினையளவும் தகுதியற்றோன் முடிதரிக்க
திணறிட்டாள் தமிழணங்கு கோபத்தோடே
தமிழுக்குத்தலை,பா.31(6-8)

கானகத்தில் குமணன்

தமிழக்கவிதை கேட்காத நாட்களெல்லாம் தன் உயிரில் நோய் படியும் என்ற குமணனின் தமிழ்ப்பற்றைப் போற்றி புகழும் ஆசிரியர் அதே நேரம் குமணன் நாட்டைவிட்டு வெளியேறியதால் அந்நாடானது பிணக்காடாக இருந்ததை

முதிரநாடு வேலி இல்லா
பயிர் போல தாலி இல்ல

Tamilmanam International Research Journal of Tamil Studies *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
Volume 12, Issue 02 (July-2026)
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12022026*

அணங்கு போல நீரில்லாதே
அழிகின்ற நஞ்சை போல.

தமிழுக்குத்தலை பா.59(1-4)

காட்சிப்படுத்துகிறார்.குமணவள்ளல் நலன் அழிந்து குடிகள் இன்றி காட்டை ஆளும் வேடுவன் போல் கனிகள் உண்டு வாழ்ந்திருந்தான். வாடாத குமணனும் வாடியிருந்தான் எனக் குறிப்பிடும் கவிஞர் அவனது குறையை வண்டினங்கள் தமிழைப் பாடி தீர்த்து விட்டது என்று வருணிக்கிறார்.

வாடாத குமணனுமே வாடி நின்றான்
வளர் தமிழின் கவி கேட்காகரணி யத்தால்
தேடாதே பாடி நின்ற வண்டி னங்கள்
தீர்ந்ததுவே அவன் குறையைத் தமிழைப் பாடி.

தமிழுக்குத்தலை, பா.77(5-8)

தலைக்கு விலை

பழிகள் செய்யும் இழிநிலைகளைப் போல பொருகளிறன் மொழிகள் கேட்டு பெருங்குமணன் இருப்பிடத்தையோஅல்லது கூரானவாள் கொண்டு அவனது தலையைக் கொய்து கொடுப்பவர்களுக்கு ஆயிரம் பொன் வழங்கப்படும் என நாட்டில் செய்தி அறிவிக்கப்பட்டது. அப்போது தன்மான இளைஞர்கள் துடித்தனர்.

குகன் அன்று இராமனுக்காய்க் கொதித்தா னென்று
கூறுதல் போல வெஞ்சினத்தால் குமுறலானார்
தகதகவென்றே கொதிக்கும் வெந்நீர் போல
தன் மான காளையர்கள் துடிக்கலானார்.

தமிழுக்குத் தலை,பா.105(5-8)

சான்றோர்களும், இளைஞர்களும் இதயத்தில் பெருந்துயரை சுமந்து வாழ்ந்தனர். இருண்டகம் முடிவடையும் என்று நம்பி தினந்தோறும் நல்லோர்கள் தொழுது நின்றனர். அனலாக எரிகின்ற உணர்வு என்றும் அழிக்காமல் அடங்காது என்று பொறுமை கொண்டனர்.

புலமையும் வறுமையும்

அரண்மனையில் புலவரது தமிழைக் கேட்டுதமிழ் வாழபரிசில் வழங்கி கரவொலிகள் நடுவே அமர்ந்த குமணவள்ளல் கனிகள் உண்டு தாழ்பணிந்து கையாலே நீர் பருகிவாழ்ந்திருந்தான் .இரவலர்களுக்குஅவன் செய்த உதவியால் வனப் பெண்ணும் இன்முகத்தால் வாழ்வளித்த நிகழ்வினை காணலாம்.

அணில்கு தைத்த கனியெல்லாம் சுவைக்க லானான்
அதன் சுவையில் தமிழ்ச் சுவையைப் பருக லானான்
பணிப்பெண்கள் போலஅங்கேகுரங்கின் கூட்டம்
பயத்தோடு வழங்கிட்ட கனிகள் எல்லாம்
அணியாக தமிழப் புலவர் கவிதையாகி
அருங்குமணன் கவலைக்கு மருந்தாய் நிற்க

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12022026

தமிழுக்குத் தலை,பா.121(1-6)

தரங்குறையாத தமிழுக்குத் தன்னைத் தந்தகுமண வள்ளலை பெருஞ்சித்திரனார் வணங்கிநின்றார். மனத்தால் உன்னைப் போற்றும் பாவலன் நான். உதிக்கின்ற கற்பனையைக் கவிதையாக்கி உன் அன்பு பாராட்டைப் பெறுவதற்காக வந்தேன் என்றார். தமிழ் உண்டு கவி உண்டு ஆனால் வாழ்வதற்குவழி இன்றி தவிர்க்கிறேன். பானையில் மருந்திற்கு கூட சிறிதுஅரிசி இல்லை கடன் கொடுப்பவரும் யாருமில்லை. பிள்ளையெல்லாம் பருக்கைச் சோற்றைபானையில் எடுப்பதற்கு சண்டையிடுவதால் பத்தினியாள் பதற்றத்துடன் என்னைப் பார்க்கிறாள் என்று தனது வறுமை நிலையை குமணவள்ளலிடம் கூறினார் பெருஞ்சித்திரனார்.;

வட்டமிட்டு பிள்ளையெலாம் பருக்கைச் சோற்றை
பானையிலே பொறுக்குதற்கு சண்டையிட்டார்
பத்தினியாள் பதட்டத்துடன் என்னைப் பார்த்தாள்
தமிழுக்குத்தலை,பா.131(6-8)

எனவும்

குப்பையிலே முளைத்திட்ட கீரைக் கிள்ளி
குறைநீக்கி கடைந்தெடுத்து குழவிக் கீந்து
சப் பென்றுஉப்பின்றி தின்று விட்டு
சலனமின்றி படுத்திருக்கும் மனைவிபக்கம்
எப்போதும் படுத்துறங்கும் மழலையர் மட்டும்
இணை முலையைச் சப்பிவிட்டுமுட்டிமுட்டி
ஒப்பாரி இசைமுழக்கி முகத்தைப் பார்க்க
உயிர் மனைவி கண்ணீரால் என்னைப் பார்த்தாள்.
தமிழுக்குத்தலை,பா.132(1-8)

இதனைபுறநானூறும்,

பசிந்தமேனியோடுபடர் அட வருந்தி
மருங்கில் கொண்டபல் குறுமாக்கள்
பிசைந்துதினவாடிய முலையள் பெரிதுஅழிந்து
குப்பைக் கீரைகொய்க்கண் அகைத்த
முற்றா இளந் தளிர் கொய்து….. புறம்,159(6-10)

என்கிறது.

தமிழுக்குத்தலை

தன்னைத் தேடிபாடிப் பரிசல் பெற காட்டிற்கு வந்த பெரும் புலவர் பெருஞ்சித்திரனாருக்கு எப்பொருளும் கொடுக்க இயலாத நிலையில் குமணன் தன் தலைக்கு கூறப்பட்ட விலையைக் குறிப்பிட்டு என் தலையைக் கொணர்வோர்க்கு பரிசில் என்றான். குமணனின் கொடுங் சொல்லை கேட்ட பெருஞ்சித்திரனார்

தமிழுக்குத் தலைகொடுத்தான் குமணன் அந்த

Tamilmanam International Research Journal of Tamil Studies *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
Volume 12, Issue 02 (July-2026)
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12022026*

தலைபெற்றான் தருக்கனொருபுலவன் என்று
தமிழுலகம் பழிக்கின்ற காவியத்தை
தருவதற்கா என்றமிழின் கவியைக் கேட்டாய்
தமிழினைனே விலை பகர்வோன் புலவன் இல்லை
தமிழ்ச்சுவையைப் போற்றுவாரின் அடி வணங்கும்
தமிழ்ப் புலவர் பொங்கிநின்றால் இடிமுழங்கும்
தரங் கெட்டோர் நொடியினிலே கருகிப் போவார்

தமிழுக்குத்தலை,பா.163(1-8)

என்றுரைத்தார். உன் தலையை இன்னொருவன் பெற்றால் மட்டும் உயர்வில்லை உன் தலையை நான் படையோடு வந்து பெற்றுச் செல்வேன் என்று கூறி தமிழின் மீது ஆணையிட்டு இளங்குமணனை சந்திக்கச் சென்றார் பெருஞ்சித்திரனார்.

உன் தலையை நான் பெறுவேன் தமிழுக்காக
உன்னுயிரை நான் பெறுவேன் கவிதைக்காக
உன் குருதி உறைத்திருக்கும் புலவருக்காய்
உன் மூச்சுவழிகாட்டும் பரிசிலார்க்கு

தமிழுக்குத்தலை,பா.164(1-4)

தானாடாவிட்டாலும் தசையாடும்

முதிரமலையில் நல்லோர்கள் வகுத்துரைத்தநல்லியல்பு இளங்குமணனின் போதையால் வீழ்ந்துபோனது. அரங்குகளில் பாவாணர் இல்லாததால் அழியாகாவியங்கள் தோன்றவில்லை. அரங்கெல்லாம் சூதாட்ட மடங்கலாகி தமிழணங்கு கதி கலங்கி விழி நீரில் விழ்ந்தாள். அத்தகைய முதிரமலையில் வந்து இளங்குமணிடம் பெருஞ்சித்திரனார் குமணவள்ளலின் தலையைக் கொண்டுவந்து கூறும் காட்சியில் புலவரின் கவிநயமும் சொல் ஆற்றலும் பாவேந்தர் பாரதிதாசனை நம் கண் முன் கொண்டுவந்துநிறுத்துகிறது.

என்னவனாம் குமணவள்ளல் தலையைக்கொய்தே
இழிசெயலை உன்னாலே செய்யலானேன்
என்னுயிரை நானழித்தல் போல் இங்கே
என் றமிழின் புரவலனை அழித்துவிட்டேன்

தமிழுக்குத்தலை,பா.204(5-8)

என்று கூறி வரலாற்றில் நின் கொடுமை நிலைத்திருக்கும். விழிப்போல உன்னைக்காத்த அண்ணனை அழித்த வெங்கொடியோன் உன்னைப் போன்று ஒருவரும் இல்லை. மொழிக்காகத் தன் உயிரை வழங்கி மொழியாகவும் மறையாகவும் மாறிவிட்டான் குமணன் என்றார்.தானாடாவிட்டாலும்
தன் தசைஆடும் என்னும் பழமொழிக்கு ஏற்ப அண்ணனின் தலை தனது பரிசு பொருளுக்காகக் கொய்யப்பட்டு வந்துள்ளது எனக்கேட்ட இளங்குமணன் தன்னை மறந்து அலறித் துடித்து கத்துகிறான்.

என் அண்ணன் உயிர்க் குடித்தப் பாவியானேன்
இவ்வுலகில் எனைப் போன்றோர் வாழ்தல் கேடு

Tamilmanam International Research Journal of Tamil Studies *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
Volume 12, Issue 02 (July-2026)
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12022026*

தன்னுயிரைத்தமிழுக்காய் தந்தஅண்ணன்
தமிழுணர்வும் தியாகமுமேஎனைப் போன்றோர்
வன்னுளத்தைத் திறக்கின்றதாக்கோலாச்சே
வாழ்வதற்கும் தகுதியற்றோன் நான் தானன்றோ
தமிழுக்குத் தலை,பா.211(5-8)

என வரும் ஒவ்வொரு காட்சிகளையும் உயிருள்ள சொற்களைக் கொண்டு இனிமையாக எளிமையோடு வருணித்துள்ளார் ஆசிரியர். குமணவள்ளல் சாகவில்லைதான் கொண்டு வந்தது குமணனது தலையுமன்று என்ற உண்மையை

வளர் தமிழின் பெருங்குமணன் சாகவில்லை
என் கண்ணைஎன் கையால் குத்துகின்ற
இயல்பெனக்குளந்தமிழும் தந்ததில்லை
தமிழுக்குத்தலை,பா.216(6-8)

என்று உணர்ச்சி வரைபடத்தைக் கையாண்டு நம்மையும் இளங்குமணனையும் இன்ப அதிர்ச்சியில் ஆழ்த்துவது மங்கா ஓவியமாக அமைகிறது. முதிரத்தில் முழு நிலவு இளங்கு மணனும் குமணனும் இணைந்து நிற்கும் காட்சியை வருணிக்க புலவர் பெருமகனார் கையாண்ட சொல் நயம் சிறப்பானது.

இளங்குமணன் இதயத்தைத் திறந்துகாட்டி
ஏற்றுக் கொள்அண்ணாஎன்றுஅலறிநிற்கும்
அளவிடவே முடியாத அன்பின் கோல
அருங்காட்சி கண்டங்கே புலவர் நின்றார்.
தமிழுக்குத்தலை,பா.241(1-4)

குமணவள்ளல் நாடு திரும்பிவிட்டான். தம்பியும் மனம் திரும்பிவிட்டான் என்ற நிலையறிந்த முதிரமக்கள் ஆடிப்பாடிப் பெருவிழா எடுத்து மகிழ்ந்த நிகழ்வை எழில் மிக்க சந்தக்கும்மியால் ஆசிரியர் எடுத்துரைப்பது மேலும் காவியத்திற்கு பெருமை சேர்ப்பதாய் அமைகிறது.

மன்னவன் வள்ளலும் சின்னவன் தம்பியும்

மன்றில் புலவரும் வாழ்கவென
தென்னவன் தமிழ் மொழிகன்னல் இசையினில்
தெள்ளுத் தமிழ்க்கும்மி பாடுவீரே
தமிழுக்குத்தலை,பா.271(5-8)

என்ற கும்மிவரிகள் கம்பனையும் அவன் முன்னோர்களையும் சுட்டிக்காட்டிநிற்கின்றன.

எல்லார்க்கும் எல்லாம் கொடு

குமணவள்ளல் கொடுத்த பரிசில் பொருட்களுடன் வீதியில் உள்ளமக்கள் வியந்திடும் வகையில் சென்ற பெருஞ்சித்திரனார் குமணவள்ளலிடம் பெற்ற பரிசிலினைதனது மனைவியிடம் கொடுத்து

நாளைக்குவேண்டும் என்று

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12022026

நலன் எண்ணிப் பதுக்கிடாதே
நாளைஎன்பது இல்லாதஒன்று.
நற்பொழுதாம் நிகழ்காலத்தை
ஊனமின்றிகளித்தலே தான்
உயர் பண்பு இதனைஎண்ணி
தானத்தைசெய்ய தீயும்
தளராதேமகிழ்வாய் ஈவாய்
தமிழுக்குத்தலை,பா.3271(1-8)

என்றார் பெருஞ்சித்திரனார். இதனை புறநானூறும்,

நின் நயந்துஉறைநர்க்கும் நீநயந்துஉறைநர்க்கும்
பல் மாண் கற்பின் நின் கிளைமுதலோர்க்கும்
கடும்பின் கடும்பசிதீரயாழநின்
நெடுங் குறியெதிர்ப்பைநல்கியோர்க்கும்
இன்னோர்க்கும் என்னாதுஎன்னொடும் சூழாது
வல்லாங்குவாழ்தும் என்னாதுநீயும்
எல்லோர்க்கும் கொடுமதி- மனைக்கிழவோயே.
பழம் தூங்கும் முதிரத்துக் கிழவன்
திருந்து வேல் குமணன் நல்கியவளனே. புறம் பா:163

என்கிறது.

முடிவுரை

முத்தமிழுக்கு முதல் மரியாதை கொடுத்து முதிரமலையைத் தமிழ் கவி சூழ்ந்து கவி பாடும் குறுநில மன்னன் குமணன். மனிதப் பிறப்பில் மனிதப் பண்பில் இன்றளவும் நீங்கா இடம் பிடித்து தம்மை நாடி இல்லை என்று வந்தோருக்கு தன்னால் இயன்றவற்றை கொடுத்து ஈகை திறத்தால் குடிமக்களின் உள்ளங்களிலும் தன் மலை நாடிபாடிவரும் புலவர்க்கு மனம் மகிழ பொன் பொருளை கொடுத்து புலவர் நலம் காத்து அவர்களது நெஞ்சங்களிலும் உதிராமல் உறைந்தவன். சங்கக் கடையேழு வள்ளல்களின் குணங்களை ஒருங்கே பெற்றவன். யார் கேட்டும் இல்லை என்று சொல்லுறையான். தன் தம்பியின் நன்றி கெட்ட செயலுக்காக தான் ஆட்சி செய்த நாட்டையே தம்பிக்கு கொடுத்து வனத்தில் வாழ்ந்தவன். தம்பியின் மதிக்கெட்ட ஆட்சியால் முதிரமலை உதிரத்தொடங்கியது. மதுபோதையிலும் சூதாட்டத்திலும் மதிமயங்கியவன் தன்னை கண்ணின் இமைபோல காத்த அண்ணனின் தலைக்கு விலை வைத்தான். கானகம் சென்று தமிழக்காத்த குமணனை காணச்
சென்ற பெரும்புலவர் பெருஞ்சித்தனாருக்கு தன் தலையை தானமாகக் கொடுக்க துணிந்தவன் குமணவள்ளல். புலவரோ தம்பியின் தலைக்கனத்தை போக்கி தம்பியே சென்று அண்ணனை அழைத்து வரவைத்து முதிரமலையை மீண்டும் ஆட்சி செய்யவைத்தார். பெரும் புலவரின் பெரும் செயலால் முதிரமலையில் முத்தமிழ் பெருக்கெடுத்து ஓடியது என்பதை புலவர் நாஞ்சில் நாரண தொல்காப்பியன் தமிழுக்கு தலை என்னும் குறுங் காவியத்தின் வழி

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12022026

காட்சிப்படுத்தி கால காலத்திற்கும் மங்கா புகழோடு வாழ வேண்டும் எனில் அறத்தோடும் தமிழ் போல் அறிவார்ந்த சமூகத்தோடும் வாழவேண்டும் அதுவே சிறந்த வாழ்வியல் என்கிறார்.

துணைநூற்பட்டில்

[1.] சிங்காரவேலு முதலியார், ஆ. *அபிதானசிந்தாமணி*. ஆசிய கல்விச் சேவை நிறுவனம், 1981.

[2.] பாலசுப்பிரமணியன், கு. வெ., தலைமைப் பதிப்பாசிரியர். *சங்க இலக்கியம் - புறநானூறு: மூலமும் உரையும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.

[3.] தொல்காப்பியன், புலவர் நாஞ்சில் நாரண. *தமிழுக்குத் தலை*. எத்திராஜ் பதிப்பகம், 2001.

முரண்பாட்டுப் பிரகடனம் (Declaration of Conflict of Interest)

இவ்வாய்வுக் கட்டுரையின் ஆசிரியர் என்ற முறையில், கட்டுரை உருவாக்கத்திலோ, அதன் பகுப்பாய்வு முடிவுகளிலோ அல்லது வெளியிடப்படும் தரவுகளிலோ எவ்விதமான நிதிசார்ந்த பின்னணியோ அல்லது தனிப்பட்ட முரண்பாடோ இல்லை என்று உறுதிபடப் பிரகடனப்படுத்துகிறேன்.

Tamilmanam